**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**
C.O.S.No. 737 of 2024
( O.S.No.1486 Of 2021)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06- வது நாள் வெள்ளிக்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.R.காளிதாஸ் | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | A.ராயப்பன் | வேலை: | அங்கீகரிக்கப்பட்ட நபர்/மேலாளர், மதுஜெயந்தி இண்டர்நேஷனல் பி.லிட்., கோயமுத்தூர் |
| வயது | 58 | செல்போன் எண் | |

பி.வா.சா.1 **திரு.காளிதாஸ்** ஆக 06.03.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள்

உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 12.01.2022 - அத்தாட்சி கடிதம் மற்றும் Board Resolution – Ex.B1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 08.09.2021 - பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு மற்றும் அதற்கான ரசீது – Ex.B2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. 23.02.2021 - 3ம் தரப்பினரிடம் இருந்து பிரதிவாதி பெற்ற Quotation - Ex.B3 ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. 06.07.2021 - 3ம் தரப்பினரிடம் இருந்து பிரதிவாதி பெற்ற Quotation - Ex.B4 ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. 23.11.2021 - 3ம் தரப்பினரிடம் இருந்து பிரதிவாதி பெற்ற Quotation - Ex.B5 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. 15.03.2021 - 3ம் தரப்பினரிடம் கொடுத்த பில் - Ex.B6 ஆக குறியீடு செய்யப்பட்டது.

7. 13.08.2021 - 3ம் தரப்பினரிடம் கொடுத்த பில் - Ex.B7 ஆக குறியீடு செய்யப்பட்டது.

8. 17.12.2021 - 3ம் தரப்பினரிடம் கொடுத்த பில் - Ex.B8 ஆக குறியீடு செய்யப்பட்டது.

9. - மின்னஞ்சல்கள் - Ex.B9 ஆக குறியீடு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி நிறுவனம் தொடங்கி எத்தனை வருடங்கள் ஆகின்றது என்றால் சுமார் 60 வருடங்கள் இருக்கும், தற்சமயம் உள்ள முகவரியில் 2012 லிருந்து இயங்கி வருகிறோம். நீங்கள் உங்கள் நிறுவனத்தில் எப்போது பணியில் சேர்ந்தீர்கள் என்றால் செப்டம்பர் 2016 லிருந்து பணி செய்து வருகிறேன். தோராயமாக உங்கள் நிறுவனத்தில் எத்தனை பணியாளர்கள் இருப்பார்கள் என்றால் 400 நபர்கள் இருப்பார்கள். நீங்கள் எந்த பிரிவில் மேலாளராக இருந்து வருகிறீர்கள் என்றால் compliance பிரிவில் மேலாளராக இருந்து வருகிறேன், நிறுவனத்தின் சட்டம் சார்ந்த விசயங்களை பார்த்து வருகிறேன். நீங்கள் சட்டப்படிப்பு படித்துள்ளீர்களா என்றால் இல்லை. கடந்த 12.01.2022 தேதியிட்ட பி.த.சா.1 board resolution அல்லாது பிரதிவாதி நிறுவனத்தால் தாவா வழக்கில் சாட்சியம் அளிக்க அதிகார ஆவணம் ஏதும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உங்களுக்கு தாவா வழக்கில் சாட்சியம் அளிக்க அதிகார ஆவணம் உங்கள் பெயரில் கொடுக்கப்படாததால் உங்களது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல, நீங்கள் பிரதிவாதி நிறுவனம் சார்பாக சாட்சியம் அளிக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல, எனக்கு authorisation கொடுக்கப்பட்டுள்ளது. வாதி நிறுவனத்திற்கு குறிப்பிட்ட வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்தது யார் என்றால் எங்கள் நிறுவனத்தின் பொது மேலாளர் ஆவார். உங்கள் நிறுவனத்தின் பொது மேலாளர் தான் வாதி நிறுவனத்திற்கு குறிப்பிட்ட வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்தினார் என்றால் சரிதான். என்ன

பொருட்களை கொண்டு வேலை செய்ய வேண்டும், பொருட்களின் தரம், விலை போன்ற விபரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது, வேலை செய்யப்பட்ட விபரம் தெரியும், யார் யார் செய்தார்கள் தெரியும். வாதி நிறுவனம் என்ன வேலைக்காக பிரதிவாதி நிறுவனத்திற்கு Quotation கொடுத்தார்கள், என்ன material கொண்டு பணி செய்ய வேண்டுமென போன்ற விபரங்கள் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உங்கள் நிறுவனத்திலிருந்து வேலை கொடுக்க வேண்டுமெனில் வாடிக்கையாளர் அனைவருக்கும் மின்னஞ்சல் மூலம் தான் தெரியப்படுத்துவீர்கள் என்றால் முக்கால் வாசி அப்படிதான் கொடுப்போம். மின்னஞ்சல் அனுப்புவது, பதிலளிப்பது போன்றவற்றிற்கும் உங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் எவ்வளவு தொகைக்கு வேலை கொடுக்கப்பட்டது, அதற்குண்டான தொகை எவ்வளவு செலுத்தப்பட்டது போன்ற விபரங்களும் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், accounts பிரிவில் பார்த்துக் கொள்வார்கள். வாதி நிறுவனம் கொண்டு வந்த material ன் தரத்தையோ, அவர்கள் செய்த வேலையையோ நீங்கள் மேற்பார்வையிடவில்லை என்றால் சரிதான், maintanence பிரிவு பார்த்துக்கொண்டது, முன்பு வேலையில் இருந்த maintanence மேலாளர் Sheikhfiaz என்பவர் தான் வாதி நிறுவனம் கொண்டு வந்த material ன் தரத்தையும், வாதி நிறுவனம் செய்த வேலையையும் பார்த்து வந்தார், அவர் confirmation கொடுத்தால் தான் வாதி நிறுவனத்திற்கு payment ஆகும். வாதி நிறுவனம் தாவாவில் தாக்கல் செய்துள்ள வா.த.சா. 1 முதல் 3 வரை உள்ள மூன்று

Quotation நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படி quotation களை நீங்கள் வாதி நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்திற்கு கொடுத்த சமயத்திலும், தாவா தாக்கல் செய்த பின்பும் பார்க்கவில்லை என்றால் சரிதான். Quotation களை எங்கள் management பார்த்துள்ளது, வேலைக்கேற்ப அதனடிப்படையில் தான் payment செய்யப்பட்டது. வா.த. சா.1 அடிப்படையில் பிரதிவாதி நிறுவனம் முதல்முறையாக வாதி நிறுவனத்திற்கு வேலை அளித்தது என்றால் சரிதான். முதல் வேலையில் ஏற்பட்ட திருப்தியில் தான் தொடர்ந்து 3 மற்றும் 4 வேலைகள் வாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் வாதி நிறுவனம் தொடர்ந்து வேலை செய்து வந்தது, மூன்றாவது வேலை செய்யும் சமயத்தில் முதல் செய்த வேலையில் பிரச்சனை ஏற்பட்டது, plywood sheet பிரிந்து விட்டது, reaper பகுதியில் பழுது ஏற்பட்டது. மேற்படி விபரம் உங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா என்றால் எனக்கு தெரியும், ஒரே அலுவலகத்தில் தான் பணியில் இருந்தேன். நீங்கள் சொல்லும் பிரச்சனை எப்போது நடைபெற்றது என்றால் 2020 ல் இருக்கும் மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 29.10.2018 முதல் கடைசி பணி தேதியான 20.02.2019 வரையிள்ள காலக்கட்டத்தில் தான் வாதிக்கு ஐந்து வேலையும் கொடுக்கப்பட்டது, மேற்படி காலக்கட்டத்தில் வாதியின் சேவை மற்றும் தரத்தில் எந்த குறைபாடும் இருந்திருக்கவில்லை என்றால் சரியல்ல, சின்ன சின்ன பிரச்சனைகள் இருந்தது அதை வாதி நிவர்த்தி செய்துள்ளார். கடந்த 29.10.2018 முதல் 20.02.2019 வரையிள்ள காலக்கட்டத்திலோ அல்லது 20.02.2019 இருந்து 2 வருட காலத்திலோ வாதி நிறுவனத்தின் சேவை மற்று

தரத்தில் குறைபாடு இருந்ததாக எழுத்துப்பூர்வமாக கடிதமோ புகாரோ பிரதிவாதி நிறுவனம் கொடுத்துள்ளதா என்றால் இல்லை, மேலாளர் Fiaz வாதி நிறுவனத்திற்கு பிரச்சனை மற்றும் குறைபாடுகளை தெரியப்படுத்தினார், 2021 ல் மின்னஞ்லும் கொடுக்கப்பட்டுள்ளது, தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. வாதி நிறுவனம் ரூ.75,84,276/- வேலை செய்துள்ளார்கள் (includes service cost, material cost and GST), அதற்கு பிரதிவாதி நிறுவனம் ரூ.69,63,504/- மட்டுமே கொடுத்துள்ளது என்றால் சரிதான். வாதி நிறுவனம் செய்த வேலைக்கு கொடுக்க வேண்டிய மீதி தொகையான ரூ.6,20,772/- கோரி தான் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பணத்தை கோரி வாதி நிறுவன உரிமையாளர், மேலாளர் மற்றும் பணியாளர்கள் பலமுறை பிரதிவாதி நிறுவனத்திடம் கேட்டுள்ளார்கள், மேற்படி தொகையை தராமல் பல காரணங்கள் சொல்லி காலம் தாழ்த்தி வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, வாதி செய்த வேலைக்கு பணம் கொடுத்துவிட்டோம், இந்த bill க்கு இவ்வளவு தொகை நிலுவை என இருக்கவில்லை. வாதி கோரும் தொகை குறிப்பிட்ட bill க்கு அல்ல, வாதி நிறுவனத்தின் பணம் எங்கள் நிறுவனத்திடம் உள்ளது, வேலையை சரியாக முடித்திருந்தால் வாதி நிறுவனத்தின் பணத்தை திரும்ப கொடுத்திருப்போம், வாதி செய்த வேலை சரியில்லை என்ற காரணத்தினாலும், அதை ஈடு மற்றும் சரி செய்ய பிரதிவாதி நிறுவனம் வேறு நிறுவனத்திடம் வேலையை கொடுத்து முடித்துக் கொண்டதால், பிரதிவாதி நிறுவனத்திற்கு வாதி நிறுவனத்தின் தொகையை விட அதிகமான செலவும்

ஆகிவிட்டது. 8 % தொகையை தான் நாங்கள் நிறுத்து வைத்துக்கொண்டோம், 8-10% பிடித்தம் செய்வதே வியாபாரத்தில் உள்ள பழக்கம். 2019 லிருந்து இன்று தேதிவரை என்னென்ன பழுது, அதை சரிசெய்ய எவ்வளவு தொகை போன்ற விபரத்தை எழுத்துப்பூர்வமாக இதுநாள் வரை வாதி நிறுவனத்திற்கு அளிக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொல்வது போல் 8 % தொகையை நீங்கள் நிறுத்து வைத்துக்கொள்வீர்கள் என work order கொடுத்த சமயத்தில் வாதி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தினீர்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அதேபோல் 8 % தொகையை நீங்கள் நிறுத்து வைத்துக்கொண்டுள்ளீர்கள் என உங்கள் பதில் அறிவிப்பிளோ, எதிர் உரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. 8 % தொகையை நிறுத்து கொள்வது ஏமாற்று வேலையல்ல என்றால் சரிதான், வேலையை முடித்தால் அந்த தொகையை கொடுத்துவிடுவீர்கள் என்றால் சரிதான். வாதி நிறுவனத்திற்கு என்னென்ன பழுது, அதை சரிசெய்ய எவ்வளவு தொகை போன்ற விபரத்தை நீங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல பலமுறை சொல்லியுள்ளோம். வா.த.சா.5 மின்னஞ்சல் அறிவிப்பில் நீங்கள் என்னென்ன பழுது, அதை சரிசெய்ய எவ்வளவு தொகை போன்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதை சொல்லி இருந்தால் வாதி நிறுவனம் சரிசெய்து கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல, எழுத்துப்பூர்வமாக சொல்வதாக பழுதுகள் அமையவில்லை, அதனால் குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. வாதி செய்த வேலைகள் எந்த குறைபாடும் பழுதும்

இல்லாத காரணத்தினால் தான் உங்களால் வாதி செய்த வேலைகளில் குறைபாடு மற்றும் பழுது பற்றி குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. பி.த.சா. 3 முதல் 5 quotation ல் உள்ள Eswari Wood and Aluminium Works நிறுவனத்தை யார் தேர்வு செய்தார்கள் என்றால் அவர்கள் எங்களுடைய Service provider, எங்கள் நிறுவனத்திற்கு ஆறு ஏழு வருடங்களாக சின்ன சின்ன பணிகளை செய்து வருகிறார். பி.த.சா. 3 முதல் 5 ல் வாதி செய்த பணியில் இருக்கும் பழுதை நீக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட வேலை என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், quotation ல் அப்படி சொல்ல முடியாது. பி.த.சா. 3 மற்றும் 4 வாதி நிறுவனத்தின் அறிவிப்பிற்கு முன்பும் பி.த.சா.5 வாதி நிறுவனத்தின் அறிவிப்பிற்கு பின்பும் பெறப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா. 3 முதல் 5 வரையுள்ள வேலைகள் வாதி செய்த பணியில் இருக்கும் பழுதை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படவில்லை, பிரதிவாதி நிறுவனத்தின் வேறு வேலைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. பி.த.சா. 3 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக ஜோடித்து தயாரிக்கப்பட்டுள்ளது, அதனால் தான் அதில் material size, தரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பி.த.சா. 6 முதல் 8 வரையுள்ள bill களுக்கு முறையாக உங்கள் நிறுவனத்திடமிருந்து மூன்றாம் தரப்பினருக்கு தொகை செலுத்தப்பட்டுள்ளதா என்றால் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு முறையாக GST செலுத்தப்பட்டுள்ளதா என்றால் செலுத்தப்பட்டுள்ளது, மாதம் Reconcile செய்யப்படும். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால்

இயலும். வாதி நிறுவனம் செய்த சேவை மற்றும் வேலையில் எந்த குறைபாடும் இருக்கவில்லை, தாவாவில் கோரியுள்ள தொகையை கொடுக்க நீங்கள் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.03.06 17:43:34 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.